இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 – 2008/2009
**LWU 3311** – நிர்வாகச் சட்டம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 1
காலம்: 40 நிமிடங்கள்

LIBRARY

திகதி: 13.10.2008 நேரம்: மு.ப 10.00 – மு.ப 10.40

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "சட்டக்கொள்கைகளாவன (அ) நடபடியான சட்டம், மற்றும் (ஆ) பொருள் அளவான சட்டம் எனப்பிரிக்கப்பட்டுள்ளன. நடபடியான சட்டத்திற்கும் பொருள் அளவான சட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையானது இன்னும் தீர்மானிக்கப்படாத ஒன்றாக இருக்கும் காரணத்தினால் தரப்பட்டச்சட்டக் கொள்கைகளை அவை நடபடியானதா அல்லது பொருள் அளவானதா என்பதனை வகுப்பாக்கம் செய்கையில் அதன் மீதான கருத்துக்கள் சில வேளைகளில் வேறுபடலாம்."

   (Sunil F.A. Cooray, *Principles of Administrative Law in Sri Lanka*. page 81).

   வலுவிகழ்தல் கோட்பாட்டின் பின்வணியில் இக்கூற்றினை ஆராய்க.

2. நகரப்பகுதிகளின் எல்லைகளுக்குள்ளாக குடிமனை மற்றும் வர்த்தக கட்டிடங்களுக்கான கட்டட நிர்மாணங்களை ஒழுங்கு படுத்துவதற்கு நகரத்திட்டமிடல் சட்டத்தினை(Country Planning Act) செரண்டிப் பாராளுமன்றமானது இயற்றியது. இச்சட்டத்தின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டு அதிகாரிகள், அச்சட்டத்தின் இலக்கினை பூர்த்தி செய்வதற்கு அவர்களது அதிகாரத்தினையும், தற்றுணிவினையும் பயன்படுத்த தேவைப்படுத்தப்பட்டனர். கட்டிட வரைபடங்களை கண்காணித்தல், இயைபுடைய விதிகளை அவை உறுதிப்படுத்துகின்றனவா என்பதனை நிச்சயப்படுத்தல் மற்றும் அதன் பின்னர் குடிமனை மற்றும் வர்த்தக கட்டிடங்களுக்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல் என்பன அவ் இலக்குகள் ஆகும்.

   லுனுகம மாநகரசபை மதிப்பீட்டு அதிகாரியான திரு. சில்வா, தமது உறவினரான திரு. பெர்னான்டோவிற்கு ஆறுமாடி குடிமனை கட்டிடத்தொகுதிக்கு(six storey residential apartment) அனுமதி வழங்கினார். எப்படி இருப்பினும், சட்டத்தின் கீழ் மதிப்பீட்டு அதிகாரிகளானவர்கள் மூன்று மாடி வரையிலான கட்டிடங்களுக்கே அனுமதி அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

   அதற்கு அண்மையிலுள்ள விமானநிலைய அதிகார சபையானது, அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடமானது அதியுயர் பாதுகாப்பு வலையத்திற்கு அண்மையில் இருப்பதாகவும் மற்றும் விமானநிலையத்தில் இருந்து விமானங்கள் தரை இறங்குவதற்கும் பறப்பதற்கு மேலெழுவதற்குமான (taking off) பாதுகாப்பிற்கு அவை அச்சுறுத்தலாக உள்ளது என்ற காரணங்களின் அடிப்படையில் திரு. சில்வாவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது. திரு. சில்வாவின் தீர்மானத்தினை அதிகார சபை கேள்விக்குட்படுத்தக் கருதுகின்றது.

   அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குக.

(பதிப்புரிமையுடையது)